# பாலஸ்தீனம் = ஃபதா நாடு - ஹமாஸ்ஸ்தான்

கலையரசன்

இதை எழுதிக்கொண்டிருக்கும்போது பாலஸ்தீனக் காஸா பகுதிமீதான இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி விட்டிருந்தது. ஹமாஸ் இயக்கமானது ஃபதா கட்சி உறுப்பினர்களை சண்டையில் தோற்கடித்து காஸா பகுதியை விடுதலை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவித்து சில நாட்களேயாகியிருந்தது. தேர்தல் களத்தில் மட்டுமல்ல, யுத்த களத்திலும் தாமே பலசாலிகள் என்று ஹமாஸ் நிரூபித்ததை பலருக்கு ஜீரணிக்கக் கஷ்டமாக இருந்த காலமது. ஹமாஸின் வெற்றியை ஃபதா கட்சித் தலைவர் அப்பாஸ் ‘சதிப் புரட்சி’ என்று விபரித்தார். அதற்கு மாறாக, ஃபதா திட்டமிட்டிருந்த சதிப்புரட்சியை முறியடிப்பதாக ஹமாஸ் கூறியது.

கடைசியாக வந்த ‘உயிர்நிழல்’ இதழில், ‘அரேபியர்கள் இரண்டுபட்டால் அமெரிக்காவுக்குக் கொண்டாட்டம்’ என்ற கட்டுரையில், விரைவில் பாலஸ்தீனத்தில் உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாயம் உள்ளதாக எழுதியிருந்தது பலருக்கு ஞாபகம் இருக்கலாம். ஃபதா - ஹமாஸ் சகோதர யுத்தம் உருவாவதற்கு ஏதுவாக இருந்த பல காரணிகள் பற்றி அந்தக் கட்டுரையில் ஏற்கனவே விபரித்துள்ளதால் இங்கே அதைப் பற்றிச் சுருக்கமாக மட்டும் பார்ப்போம். நோர்வே தலையிட்டுத் தீர்த்து வைத்த அல்லது திரித்து வைத்த இஸ்ரேலிய-பாலஸ்தீன சமாதான ஒப்பந்தம்



> “பாலஸ்தீனம் என்ற தனிநாடு மக்களின் மனங்களில் மட்டுமே நிலைத்து நிற்கும் கனவாக முற்றுப் பெற்றுவிடும்.”

பாலஸ்தீனப் பகுதிகளை, ஆதிக்கம் செலுத்திய பாலஸ்தீன அதிகார சபையிடம் ஃபதா கையளித்தது. அதன் பின்னர் உருவான இஸ்ரேலியத் தரப்பு ஆத்திரமூட்டல்களை எதிர்கொண்டு முறியடிக்கத் திராணியற்றிருந்த பாலஸ்தீன அதிகார சபை ஒப்பந்தத்தின் பலவீனமான பகுதியை வெளிக்காட்டியது. மேலும் பிராந்தியப் பொருளாதாரத்தைத் தன் கையில் வைத்திருந்த ஃபதா, ஆசி பெற்ற வர்த்தகப் பெரும் புள்ளிகள் கொடுத்த வெகுமானத்தால் செல்வந்தர்களான மாண்புமிகு அமைச்சர்களும் பிற அதிகாரிகளும் புதிய பாலஸ்தீன மேட்டுக் குடியினரையும் ஒரு பக்கம் உருவாக்கியது. மறு பக்கத்தில், குறைந்த கூலி உழைப்பாளிகளான பாலஸ்தீன ஏழை மக்கள் இஸ்ரேலிய அடக்குமுறைகளுக்கும் அன்றாடம் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இவ்வாறு இரண்டு பக்கத்தாலும் சுரண்டப்படும் சாதாரண பாலஸ்தீன மக்கள் நோர்வே கொண்டு வந்த சமாதான ஒப்பந்தம் தமக்கு எந்த நன்மையையும் வழங்காததைக் கண்டு கொண்டனர். அப்போது மிகச் சிறிய இஸ்லாமியவாத இயக்கமாக இருந்த ஹமாஸ் பொதுமக்களின் நாடித் துடிப்பை சரியாகக் கணித்துக் களத்தில் இறங்கியது. மனித வெடிகுண்டுகளைத் தயாரித்தனுப்பும் புதிய உத்தியை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்தியாக இனம் காட்டியது. ஃபதா ஆட்சியாளர்களின் ஊழல்களால் வெறுப்படைந்திருந்த பாலஸ்தீன மக்கள் ஹமாஸ் போன்று நேர்மையாகச் செயற்படும் அரசியற் சக்திக்கு ஆதரவளித்ததில் வியப்பில்லை. இதன் விளைவு கடந்த

பொதுத்தேர்தலில் ஹமாஸ் போட்டியிட்டபோது மக்கள் அதற்கு அமோக ஆதரவு வழங்கி வெற்றியடையச் செய்தனர்.

இதே நேரத்தில், சர்வதேச சமூகம் என்ற பெயரில் 'அதியுன்னத நாகரிகமடைந்த' சில நாடுகள் பெரும் பான்மை மக்களின் ஜனநாயக முடிவை ஏற்றுக் கொள்ள மறுத்து, ஏற்கனவே வழங்கி வந்த நிதியுத வியை நிறுத்தினர். இதன் எதிரொலி பாலஸ்தீனப் பிரதேசமெங்கும் எதிரொலித்தது. மாதக் கணக்காக சம்பளம் கிடைக்காத அரசாங்க ஊழியர்கள் வீதியில் இறங்கிப் போராடியபோது ஹமாஸிடம் போய்ப் பெற்றுக் கொள்ளுமாறு விரட்டப்பட்டனர். அதேநேரம் ∴பதா தலைமையின் கீழான குண்டர் படை ஆயுதம் தரித்த வீடுகளுக்கு மட்டும் இந்த அத்தியாவசிய சேவைகள் தாராளமாக வழங்கப்பட்டன. அதேநேரம் பாலஸ்தீன வீடுகளுக்கு பற்றாக் குறையாக வழங்கி அவ்வப்போது தண்டனையாக நிறுத்தப்பட்டும் வந்தது.

இத்தகைய பின்னணியில்தான், தற்போது ஹமாஸ் வெற்றியின் பின்னர் 'காஸாஸிஸ்தான்' என்று அழைக் கப்படும் பிரதேசத்தின் எதிர்காலத்தைப் பார்க்க வேண்டியுள்ளது. காஸாவைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பாலஸ்தீன அரசாங்கத்தை நிர்வகிக்கும் ∴பதா தனது பாதுகாப்புப் படைகளில் சுமார் எழுபதி னாயிரம் இளைஞர்களைச் சேர்த்திருந்தது. இந்தப் பெரும்படையால் ஹமாஸின் பத்தாயிரம் போராளிகளை எதிர்த்துச் சண்டையிட முடியாமல் பின் வாங்கி ஓடியது.



ஹமாஸ் போராளிகளை வலுச் சண்டைக்கு இழுத்தது. இதற்கிடையே ஹமாஸ் - ∴பதா இணைந்த புதிய அமைச்சரவை என்று ஜனாதிபதி அப்பாஸ் நாடக மாடினார். ஆனால் ஜூன் மாதம் காஸாவில் வெடித்த உள்நாட்டுப் போர் இவை எல்லாவற்றையும் முடிவுக்குக் கொண்டு வந்தது. பூகோளரீதியாக வெடித்த பாலஸ்தீன நிலப்பரப்பில் இரண்டு சதவீதமேயுள்ள காஸா பகுதி நெருக்கமான குடிசனப் பரம்பலைக் கொண்ட, ஒன்றரை மில்லியன் பாலஸ்தீனர்களின் வாழ்விடம். வடக்கிலும் கிழக்கிலும் இஸ்ரேலாலும் மேற்கே கடலாலும் தெற்கே எகிப்திய எல்லையாலும் சூழப்பட்ட காஸா பகுதி இன்னொரு பாலஸ்தீன தாயகப் பகுதியான மேற்குக் கரையுடன் நிலத்தொடர்பற்று பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விரு பிரதேசங்களுக்கிடையிலான பொதுமக் களின் போக்கு வரத்து மற்றும் அரச காரியங்கள் யாவும் இஸ்ரேலின் தயவின் அடிப்படையில் நடந்து வந்தது. இதனால் காஸா என்பது ஒரு திறந்த வெளிச் சிறைச் சாலை என்று அங்கு வாழும் மக்கள் கூறிக் கொள் கின்றனர். இதைத் தவிர, அத்தியாவசியத் தேவை களான தண்ணீர், மின்சாரம், 'காஸ்' போன்றவற்றை இஸ்ரேலிய நிறுவ னங்களே வழங்கி வருகின்றன. முன்பு யூதக் குடியேற் றங்கள் இருந்த காலத்தில் யூத ∴பதா பாதுகாப்புப் படையில் சேர்ந்த இளைஞர்கள் வேறு வேலையில்லாமல் கூலிக்காகச் சேர்ந்த இளை ஞர்கள் என்பதும் ஹமாஸில் சேர்ந்தவர்கள் இலட்சிய அர்ப்பணிப்புடனான இளைஞர்கள் என்பதும்தான் வித்தியாசம். தோல்வியடைந்த ∴பதா கட்சிப் பிரமு கர்களும் அவர்களின் குடும்பங்களும் கடலாலோ நிலத்தாலோ இஸ்ரேலுக்குள் தப்பியோடி, பின்னர் மேற்குக் கரைக்குப் போய்ச் சேர்ந்தனர். காஸா பகுதி முழுவதும் ஹமாஸின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த தும் சண்டையில் பிடிபட்ட ∴பதா பிரமுகர்கள் மரண தண்டனை விதிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர் .

∴பதாவினால் நிர்வகிக்கப்பட்ட பாதுகாப்புத் தலைமையகம் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்க நிகழ்வு. அந்தப் பிரமாண்டமான கட்டிடத்தில் வைத்துத் தான் பல ஹமாஸ் உறுப்பினர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். மேலும் அலுவலகங்களில் இருந்து எடுக்கப்பட்ட ஆவணங்களில் ∴பதா அரச நிர்வாகத் திற்கு இஸ்ரே லில் அல்லது அமெரிக்காவில் இருந்து கிடைத்து வந்த பல்வேறு உதவிகள் பற்றிய விபரங்கள் இருந்தன. காஸாவின் ஆட்சியதிகாரத்தை ஹமாஸ் பொறுப்பெடுத்த அடுத்த நாளே சட்டம், ஒழுங்கு சீர்ப் படுத்தும் பணியில் இறங்கியது. சீருடை தரித்த புதிய

ஹமாஸ் பொலிஸ் வீதிப் போக்குவரத்தை ஒழுங்கு படுத்தியது. காஸா பகுதியில் வாழும் மக்கள் எங்கே யும் தப்பியோட முடியாமல் கடைசிவரை அங்கேயே இருக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி உள் ளனர். எகிப்து எல்லையைச் சேர்ந்த சிறு நிலப்பரப்பில் சகோதர சண்டை ஆரம்பித்த முதல் நாளே இஸ்ரேலிய இராணுவம் நிலை கொண்டது. எல்லையின் மறுபக்கம் எகிப்து இராணுவம் பாதுகாப்பைப் பலப்படுத்தியது. இந்த எல்லைக்கோட்டில் ஏற்கனவே இஸ்ரேல் உயர மான மதில் கட்டியுள்ளது. மதிலின் அத்திவாரம் நிலத் தின் கீழ் பத்தடி ஆழத்திற்குச் செல்கிறது. மதிலின் அடுத்த பக்கம் எகிப்திய சிறு நகரம் ர.்.பா. இது பாலஸ் தீன நிலவரங்களுடன் நேரடித் தொடர்பு கொண்டது. இங்கிருந்துதான் ஹமாஸிற்குத் தேவையான ஆயுதங் கள் கடத்தப்படுகின்றன. ர.்.பா நகர வீதிகளினுள் இருந்து தோண்டப்படும் சுரங்கங்கள் எல்லைக்குக் கீழே இருபதடி ஆழத்திற்குப் போய் காஸாவில் முடி கின்றன. இந்த சுரங்கங்களூடாக ஆயுதங்களைக் கடத்தும் இடைத் தரகர்களான ர.்.பா கடத்தல்காரர் கள் பெரும் பணம் சம்பாதித்து வருகின்றனர். எகிப்து அரசாங்கத் தால் கவனிக்கப்படாத, அபிவி ருத்தி இன்றிப் பின்தங்கிய ர.்.பா மக்கள் வறுமையில் இருந்து மீளு வதற்குக் கடத்தல் தொழிலை நம்பியுள்ளனர். தற்போது என்ன தான் எகிப்திய பொலிஸின் கெடு பிடிகள் இருந்தபோதும் ஆயுதக் கடத்தல்கள் தொடரவே செய்யும். ஹமாஸிற்காகக் கடத்தப்படும் ரஷ்ய அல்லது சீனத் தயாரிப்புக் களான ஏ.கே.47 வகைத் துப்பாக் கிகள் சூடானில் இருந்து வருவ தாகத் தெரிய வந்துள்ளது.

இஸ்ரேலோ அல்லது சர்வ தேச சமூகமோ சும்மா கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண் டிருக்கவில்லை. ஹமாஸின் தேர் தல் வெற்றியின் பின்னர், தடுத்து வைக்கப்பட்ட உதவிப்பணம் மற்றும் பாலஸ்தீன வரிப்பணம் ஆகியனவற்றை ்.பதாவிடம் கையளிப்ப தாக அறிவித்துள்ளன. இதில் ஒரு சதம்கூட காஸா விற்குப் போகாது. இதனால் மேற்குக்கரைப் பாலஸ்தீன மக்கள் ்.பதாவில் தங்கியிருந்து வளம் பெறவும் காஸா மக்கள் ஹமாஸின் கீழ் தண்டனை அனுபவிக்கவும் என வகுக்கப்பட்டுள்ளனர். மேற்குக் கரையில் மட்டும் ஆதிக்கம் செலுத்துவதாகக் காட்டிக் கொள்ளும் அப்பாஸ் தலைமையிலான ்.பதா, சர்வதேச சமூகம் பின்னுக்கு நின்றபோதும், பலவீனமான நிலை யிலேயே உள்ளது. இருப்பினும் அங்கேயும் ஹமாஸின் கை ஓங்கு மாகில் பல அதிரடியான மாற்றங்களை எதிர் பார்க்க லாம். மேற்குக்கரை நிரந்தரமாக ஜோர்டானுடன் இணைக்கப்பட்டுவிடும் என்ற வதந்திகூட உலாவு கின்றது. அப்படி நடந்தாலும், காஸா தொடர்ந்தும் இஸ்ரேலின் திறந்தவெளிச் சிறையாக நீடிக்கும்.

பாலஸ்தீன அரசியல் கள நிலைமைகள் மாறி வரும் போக்கைப் பார்க்கும்போது, முன்னாள் இஸ்ரேலிய வலதுசாரிப் பிரதமர் ஆரியல் ஷரோனின் கனவு நனவா கின்றதோ என்ற ஐயம் உருவாகின்றது. பாலஸ்தீனப் பிரச்சினைக்கான தீர்வாக ஷரோன் தென்னாபிரிக்க அப்பார்த்ஹைட் (Apartheid- ஆப்ரிக்கான்ஸ் மொழியில் பிரித்து வைத்தல்) முறையை அறிமுகப்படுத்த விரும்பி னார். முன்பு தென்னாபிரிக்காவை ஆட்சி செய்த வெள்ளை நிறவாத அரசாங்கம் கறுப்பின மக்களின் ஊர்களை 'பாண்டுஸ்தான்' என்ற பெயரில் தனிமைப் படுத்தப்பட்ட பிரதேசங்களாக்கி பல திறந்தவெளிச் சிறைச்சாலைகளை உருவாக்கி வைத்திருந்தது.

தென்னாபிரிக்க உதாரணத்தைப் பின்பற்றி காஸா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது மட்டுமல்லாது, மேற்குக் கரைகூட இஸ்ரேலிய இராணுவக் கலகக்காரர்களால் வடக்கு, தெற்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு ஜெருசலேம் இவை எதிலும் சேராதவாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சியால் அல்லலுறும் பாலஸ்தீன மக்கள், தமது உறவினர்களைப் பல்லாண்டுகளாக காணாமல் பிரிந்தி ருப்பது சர்வசாதாரணமான வாழ்க்கையாகிவிட்டது.



நிலைமை இப்படியே போனால் பாலஸ்தீனம் - இஸ்ரேல் என்ற இரண்டு நாடுகளல்ல, ஐந்து நாடுகள் உருவாகும் என உள்ளூர் மக்கள் பேசிக் கொள்கின் றனர். ஷரோன் போன்ற தீவிர வலதுசாரிகளின் திட்டம் பலிக்குமானால், கடந்த ஐம்பது வருடங்களாக, சர்வ தேச மட்டத்தில் முதன்மைப் பிரச்சினையாக இருக்கும் பாலஸ்தீனம் என்ற சுதந்திர நாட்டுக்கான ராஜதந்திர முயற்சிகள் யாவும் நிரந்தர தோல்வியைத் தழுவும்.

பாலஸ்தீனம் என்ற தனிநாடு மக்களின் மனங்களில் மட்டுமே நிலைத்து நிற்கும் கனவாக முற்றுப் பெற்று விடும்.